OS: 509/2018

Date:01.08.2023

பெயர் :மனோகரன்

**வாதி தரப்பு சாட்சி 1 ஆஜர், சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>:- 5 முதல் 7 பிரதிவாதிகள் தரப்பில்

வழக்கில் என்ன பரிகாரம் கேட்டுள்ளோம் என்றால் கோவில் சொத்து திரும்ப அளிக்கவேண்டும் என கேட்டுள்ளோம். எத்தனை அயிட்டங்கள் சொத்துக்களாக காட்டியுள்ளோம் என்றால் ஒரே அயிட்ட சொத்தை காட்டியுள்ளோம். முதல் விசாரணை வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் அனைத்தும் நான் சொல்லிதான் தயாரிக்கப்பட்டது என்றால் சரிதான், அதிலுள்ள விவரங்கள் அனைத்தும் எனக்கு தெரியும் என்றால் சரிதான். எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் தாவா சொத்துக்கள் வாதி கோவிலில் சுவாதீனத்தில் உள்ளது என சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். முதல் விசாரணையில் தாவா சொத்தின் சுவாதீனம் எங்களிடம் இருப்பதாக குறிப்பிட்டுவிட்டு, ஏன் தாவா சொத்து சுவாதீனம் குறித்து வழக்கில் குறிப்பிட்டுள்ளோம் என்றால் தாவா சொத்தின் இரண்டு பக்கமும் ஆக்கிரமிப்புகள் உள்ளது.

வழக்கு சொத்தின் சுவாதீனம் எங்களிடம் இருப்பதாக ஒப்புக்கொண்டுள்ளதால் நாங்கள் தாவாவில் கேட்டுள்ள சுவாதீன பரிகாரம் கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் இரண்டு பக்கங்களிலும் யார் யார் எவ்வளவு அளவுகளில் ஆக்கிரமிப்பு செய்துள்ளார்கள் என வழக்குரையிலும் சொத்துவிவரத்திலும் சொல்லியுள்ளேனா என்றால் எனக்கு ஞாபகமில்லை. நான் முதல் விசாரணை பிரமாண பத்திரிக்கை தாக்கல் செய்யும்போது வழக்கின் முழு விவரங்களையும் தெரிந்துகொண்டுதான் தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். 1, 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை செய்தபோதும் வழக்கின் விவரங்கள் எனக்கு தெரியும். வழக்கு சொத்து எங்களுக்குதான் பாத்தியப்பட்டது என நாங்கள் இவ்வழக்கை நடத்தி வருகிறோம் என்றால் சரிதான்.

எனக்கு அனைத்து வழக்கு விவரங்களும் தெரிந்தும், ஏன் சொத்துவிவரத்தில் ஆக்கிரமிப்பு குறிப்பிட்டுள்ளேனா, குறிப்பிடவில்லையா என ஞாபகம் இல்லை என சொல்கிறேன் என்றால் எனக்கு வயதாகிவிட்டது. வழக்கு சொத்தின் நீள அகலம் உட்பட எவ்வளவு விஸ்தீரனம் என்று எனக்கு தெரியுமா என்றால் ஞாபகம் இல்லை. இந்த பிரதிவாதிகள் எவ்வளவு விஸ்தீரண அளவில் ஆக்கிரமிப்பு செய்துள்ளார்கள் என எனக்கு தெரியுமா என்றால் பிரதிவாதிகள்

இருக்கும் இடத்தின் பக்கத்தில் உள்ள பகுதிகளை ஆக்கிரமிப்பு செய்துள்ளார்கள் என தெரியும். ஆனால் பிரதிவாதிகள் ஆக்கிரமிப்பு செய்துள்ள பகுதியின் நீள அகலங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. சொத்தின் நீள அகலம் தெரியாது என்கின்ற நிலையில் அந்த சொத்தினை அடையாளம் காணமுடியாது என்று சொன்னால் சரியல்ல, அடையாளம் காண முடியும். ஆக்கிரமிப்பு பகுதிகளில் நீள அகலம் எவ்வளவு என்றும், இவ்வழக்கு நடந்துகொண்டிருக்கும்போதாவது எவ்வளவு என தெரிந்துகொள்ள நடவடிக்கை எடுத்தேனா என்றால் இல்லை.

இவ்வழக்கில் பிரதிவாதிகள் சொத்தில் எவ்வளவு ஆக்கிரமிப்பு செய்துள்ளார்கள் என குறிப்பிட்டு வழக்குரையிலும், சொத்து விவரத்திலும் சொல்லியுள்ளோ என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. வழக்குரையிலும், சொத்துவிவரத்திலும் தாவா பிரதிவாதிகள் எங்கெங்கு எவ்வளவு தூரம் ஆக்கிரமிப்பு செய்துள்ளார்கள் என எந்த இடத்திலும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதிகள் எந்த இடத்தில் எவ்வளவு ஆக்கிரமிப்புகள் செய்துள்ளார்கள் என்பதே சொல்லப்படாத நிலையில் பிரதிவாதிகள் தாவா சொத்தினை ஆக்கிரமிப்பே செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. ஆகவே நான் சுவாதீனத்தை பொருத்து வழக்குரையில் திருப்பி கொடுக்கவேண்டும் என கேட்டுள்ள செயலுறுத்துகட்டளை பரிகாரம் எனக்கு கிடைக்கதக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. ஆக்கிரமிப்பே இல்லாத நிலையில் ஆக்கிரமிப்பை நீக்கிதரவேண்டும் என நாங்கள் கோரியுள்ள பரிகாரம் எங்களுக்கு கிடைக்கதக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. இவ்வழக்கு பிரதிவாதிகள் எங்கள் மீது ஒரு வழக்கு போட்டார்கள் என்றால் சரிதான். அந்த வழக்கானது வாதியின் வருகையின்மையால் தள்ளுபடியாகிவிட்டது என்று சொன்னால் அது எனக்கு தெரியாது.

மேற்படி வழக்கு தள்ளுபடியானதால்தான் வழக்கு சொத்தில் இந்த பிரதிவாதிகளுக்கு உரிமை இல்லை என நாங்கள் வழக்கில் சொல்லியுள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. இந்த பிரதிவாதிகளின் வழக்கானது வாதிகளாக இருந்து தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நிலுவையில் இருக்கும்போது நாங்கள் இவ்வழக்கை பிரதிவாதிகள் மீது தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. இந்த பிரதிவாதிகளின் மணி வகையறா போட்ட வழக்கானது அவர்கள் சுவாதீனத்தை இடஞ்சல் செய்யக்கூடாது என வழக்கு போட்டிருந்தார்கள் என்றால் அது எனக்கு ஞாபகமில்லை. நாங்கள் போட்ட இந்த வழக்கானது உரிமை மூலம் யாருக்கு என்பதால் தான் மணி வகையறா மேற்படி வழக்கினை நடத்தாமல் இந்த தாவாவிலேயே தீர்மாணித்து கொள்ளலாம் என இருந்து விட்டார்கள் என்று சொன்னால் சரியல்ல.

மணி வகையறாவிற்கு தாவா சொத்தில் உரிமை இல்லை என்றும், நாங்கள் தான் உரிமையாளர் என விளம்புகை செய்ய கேட்டுள்ள பரிகாரம் கிடைக்கதக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தானது டிரஸ்டுக்கு பாத்தியப்பட்டதா அல்லது கோவிலுக்கு பாத்தியப்பட்டதா என்றால்

கோவிலுக்கு பாத்தியப்பட்டது. கோவிலுக்கு வரவு செலவு கணக்குகள் உள்ளதா என்றால் உள்ளது. அந்த கணக்குகள் யார் மூலம் சரிபார்க்கப்படுகிறது என்றால் இந்து சமய அறநிலையத்துறையின் மூலம் சரிபார்க்கப்படுகிறது. இந்து சமய அறநிலையத்துறையை இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்து கோவிலுக்கு எப்படி பாத்தியப்பட்டது என்றால் எனக்கு முன்பிருந்த நிர்வாகத்தினருக்குதான் தெரியும். எனக்கு முன்பிருந்த கோவில் நிர்வாகத்தினர் தற்போது இருக்கிறார்களா என்றால் ஒருசிலர் இருக்கிறார்கள் ஒரு சிலர் இறந்துவிட்டார்கள். அதில் யார் யார் உயிருடன் இருக்கிறார்கள் என்றால் பாலசுப்ரமணியம் என்பவர் இருக்கிறார். அவர் இவ்வழக்கில் வாதியாக இருக்கிறார் என்றால் சரிதான். மேற்படி பாலசுப்ரமணியத்திற்கு சேர்த்துதான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் இவ்வழக்கில் அனைத்து வாதிகளுக்காகவும் சாட்சியம் அளிக்கிறேன்.

வழக்கு சொத்துகுறித்து எந்த விதமான பதிவு செய்யப்பட்ட ஆவணமும் எங்கள் தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை என்பதால் தாவா சொத்துக்கள் கோவிலுக்கே சொந்தமானது அல்ல, பாத்தியப்பட்டது அல்ல என்று சொன்னால் சரியல்ல. வழக்கு சொத்தானது அரசாங்கத்திற்கு பாத்தியப்பட்ட சொத்தாக இருந்து அந்த நிலத்தினை கோவிலுக்காக ஆக்கிரமிப்பு செய்து எடுத்துகொள்ளப்பட்டதா என்றால் அது எனக்கு தெரியாது. ஒரு பத்திரம் இருந்தால் தான் அதன் அடிப்படையில் பட்டா வழங்கப்படும் என்றால் சரிதான். வழக்கு சொத்து கோவிலுக்கு பாத்தியப்பட்டது என்பதை காட்ட எங்கள் தரப்பில் எந்த விதமான பதிவு செய்யப்பட்ட ஆவணங்களும் தாக்கல் செய்யப்படவில்லை என்று சொன்னால் அது எனக்கு சரியாக தெரியவில்லை. வழக்கு சொத்தானது ஆக்கிரமிப்பு செய்தும் பட்டா வழங்கப்படவில்லை, ஆவணம் பதிவு செய்யப்பட்டு அதன்படியும் பட்டா வழங்கப்படவில்லை எப்படி பட்டா தாவா நிலத்திற்கு வழங்கப்பட்டது என்றால் பெரியோர்கள் காலத்திலிருந்து வழக்கு சொத்தானது அனுபவத்தில் இருந்து வந்தது. நான் சொல்வது முழுக்க தவறு என்றும், வழக்கு சொத்திற்கும் இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பட்டாவிற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

பட்டாவின் மூலம் நாங்கள் எந்தவித உரிமை மூலத்தையும் நிலைநாட்ட முடியாது என்றால் சரியல்ல. வழக்கு சொத்து எந்த திசையை பார்த்தது போல் உள்ளது என்றால் நான்கு திசைகளுக்கும் மைய பகுதியில் உள்ளது. பெங்களூர், சேலம் செல்லும் மெயின்ரோடானது எப்படி செல்கிறது என்றால் வடக்குநோக்கியும் தெற்குநோக்கியும் செல்கிறது. மேற்படி வடக்கும், தெற்கும் செல்லக்கூடிய ரோட்டிற்கும் எந்த பகுதியில் தாவா சொத்து அமைந்துள்ளது என்றால் மேற்படி மெயின்ரோட்டிற்கு கிழபுறத்தில் உள்ளது. மேற்படி மெயின்ரோட்டிற்கு கிழபுறத்தில் ஓமலூர் டவுன் பஞ்சாயத்து சார்பாக அமைக்கப்பட்டுள்ள ஒரு சிமெண்ட் ரோடு இருந்து வருகிறது என்றால் தவறு. இவ்வழக்கு நிலுவையில்

இருந்தபோது நீதிமன்ற ஆணையர் நியமிக்கப்பட்டார் என்றால் சரிதான். அவர் தாவா சொத்தினை பார்வையிட்டு இயற்கை அம்சங்கள் குறித்து அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி ஆணையர் அறிக்கைக்கு எங்கள் தரப்பில் ஆட்சேபனை கொடுக்கப்பட்டுள்ளதா என்றால் அது எனக்கு தெரியவில்லை. ஆணையர் அறிக்கையில் என்ன குறிப்பிட்டுள்ளார் என தெரிந்துகொண்டேனா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை.

ஆணையர் அறிக்கையில் நீதிமன்ற ஆணையர் தாவா சொத்தினை பார்வையிட்டபோது இருசக்கரவாகனமும், நான்கு சக்கர வாகனங்களும் சென்று வந்ததாக குறிப்பிட்டுள்ளார் என்றால் சொத்தானது சும்மா இருப்பதால் சென்று வந்துள்ளார்கள். நான் சொல்வதுபோல் வழக்கு சொத்தானது சும்மா இருக்கவில்லை என்றும், அது ரோடாக இருப்பதால்தான் அதில் பொதுமக்கள் சென்றுவந்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் வழக்கு சொத்தின் நீள, அகலம் குறிப்பிடப்படவில்லை என குறிப்பிட்டுள்ளார் என்றால் அது எனக்கு தெரியவில்லை. எனக்கு வழக்கு சொத்துவிவரங்கள் முழுமையாக தெரிந்திருந்தும் உண்மையை சொன்னால் நீதிமன்றத்திற்கு உண்மை தெரிந்துவிடும் என்பதால் நான் ஞாபகம் இல்லை என பொதுவாக பதில் சொல்லிவருகிறேன் என்று சொன்னால் சரியல்ல. வழக்கு சொத்தானது ஓமலூர் டவுன் பஞ்சாயத்தால் போடப்பட்டு இன்றுவரை பொது பயன்பாட்டில் இருந்துவருகிறது என்று சொன்னால் சரியல்ல.

வழக்கு சொத்தின் ஒரு பகுதியில் கழிவு நீர் செல்லக்கூடிய கால்வாய்கள் ஓமலூர் டவுன் பஞ்சாயத்தால் அமைக்கப்பட்டு கழிவு நீர் செல்கிறது என்று சொன்னால் சரியல்ல, அவ்வாறு கால்வாய்கள் எதுவும் இல்லை. நீதிமன்ற ஆணையர் அறிக்கை தாக்கல் செய்த பின்னிட்டு வழக்கு சொத்தின் நீள அகலங்கள் குறித்து திருத்தம் செய்ய எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. வழக்கு சொத்தில் பொதுமக்கள் பயன்பாட்டிற்காக ஒரு பொது கழிப்பிடமும், குடிநீர் தேவைக்காக ஒரு கிணறும் உள்ளது என்றால் சரியல்ல, அது வழக்கு சொத்திலிருந்து தள்ளிதான் இருக்கிறது. வழக்கு சொத்தில் உள்ள பாதையை தான் பொதுமக்கள் பயன்படுத்தி வருகிறார்கள் என்று சொன்னால் வழக்கு சொத்திற்கு கிழக்கிலும், மேற்கிலும் உள்ள மெயின்ரோட்டிற்கு சென்றுவருகிறார்கள் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தில் அமைந்துள்ள ரோடும், பொது கழிப்பிடம் மற்றும் கிணறு ஆகியவைகளை தற்போதும் ஓமலூர் டவுன் பஞ்சாயத்தால் நிர்வாகம் செய்யப்பட்டு வருகிறது என்றால் சரியல்ல.

ஓமலூர் டவுன் பஞ்சாயத்து தரப்பினரும் ஒரு அத்தியாவசிய தரப்பினர் என்பதால் அவர்களையும் இவ்வழக்கில் கட்சி சேர்க்கப்பட்டிருக்க வேண்டும் ஆனால் எங்கள் தரப்பில் அவர்களை அவசிய தரப்பினர்களாக சேர்க்காமல் இவ்வழக்கை நடத்துவது ஏற்க்கதக்கதல்ல என்று சொன்னால்

சரியல்ல. வழக்கில் எங்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள கந்தாய ரசீதானது எந்தவிதமான உரிமைமூலமும் எங்களுக்கு ஏற்படுத்தாது என்று சொன்னால் சரியல்ல. கந்தாய ரசீதுகள் அனைத்தும் வழக்கின் தன்மைக்கு பொருந்தாதவைகள் என்று சொன்னால் சரியல்ல. ஆகவே நாங்கள் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு தள்ளுபடியாகவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>**:- இல்லை.

ஒப்பம்/-PW1
ஒப்பம்/- சார்பு நீதிபதி, ஓமலூர்.